புதுச்சேரி அரசு - பள்ளிக் கல்வி இயக்ககம்

ஒருங்கிணைந்த கல்வி (Samagra Shiksha)

புதுச்சேரி.

**No. 4002/IED/SS/2019-20** புதுச்சேரி: 12.09.2019

<u>சுற்றறிக்கை</u>

பொருள்: ஒருங்கிணைந்த கல்வி (Samagra Shiksha) - பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனை முகாம் - தொடர்பானது.

************

பள்ளியில் பயிலும் மாணவர்கள் நலனுக்காகப் புதுச்சேரி ஒருங்கிணைந்த கல்வியும் (Samagra Shiksha) மற்றும் அரவிந்தர் கண் மருத்துவமனையும் இணைந்து மருத்துவப் பரிசோதனை முகாம் ஒன்றினை நடத்த உள்ளது.

பள்ளிகளில் பயிலும் 6 - 18 வயதுக்குட்பட்ட <u>கண் குறைபாடுடைய</u> மாணவர்களை ஆசிரியர் துணையுடன் அடையாளம் கண்டு, அவர்களை தங்கள் பள்ளிக்கு அருகில் உள்ள பரிசோதனை முகாமிற்கு படிப்புச் சான்றிதழ்வுடனும் (Study Certificate) ஒரு ஆசிரியர் துணையுடனும் அனுப்பி வைக்குமாறு முதல்வர்கள் / தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கலந்து கொள்ளும், ஒவ்வொரு மாணவருக்கும் போக்குவரத்துச் செலவுக்காக ரூ.50/- வழங்கப்படும்.

ஒரு பள்ளியிலிருந்து இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கண் பரிசோதனை முகாமில் கலந்துக்கொள்ள வேண்டி இருப்பின், அந்தப் பள்ளிகள் இத்தகவலை, ஒருங்கிணைந்த கல்வி, அலுவலகத்திற்கு ஒரு கடிதம் வாயிலாக தெரிவித்தால், இப்பரிசோதனையை பள்ளிக்கு அருகாமையிலே நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பினும் கண்ணாடி அணிந்து பார்வை குறைபாடு உடைய மாணவர்கள் பள்ளிகளில் இருந்தால், அவர்கள் பரிசோதனை முகாமிற்கு தவறாமல் கலந்து கொள்ள பள்ளி நிர்வாகம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பரிசோதனை முகாம் கீழ்க்கண்ட நாட்களிலும், இடங்களிலும் நடைபெற உள்ளது.

| நாள் | இடம் | நேரம் |
|---|---|---|
| **10.10.2019**<br>வியாழக்கிழமை | வாணியர் திருமண நிலையம் - வில்லியனூர் | **9.30 am - 3.30 pm** |
| **11.10.2019**<br>வெள்ளிக்கிழமை | கீர்த்தி மஹால், லெனின் வீதி,<br>குயவர்பாளையம் | **9.30 am - 3.30 pm** |

குறிப்பு: <u>மாணவர்கள் மருத்துவ முகாமில் மதியம் 12.00 மணிக்குள் பதிவு செய்திட வேண்டும்.</u>

<u>(தொடர்புக்கு திரு.ப.சரவணன், ஒருங்கிணைப்பாளர், (கைப்பேசி எண். 9442892109)</u>

/ ஆணைப்படி /

தினகர்-ந

(ந. தினகர்)

மாநிலத் திட்ட இயக்குநர்

ஒருங்கிணைந்த கல்வி (Samagra Shiksha)

பெறுநர்

முதல்வர் / தலைமை ஆசிரியர்

படி பெறுநர்

1. இணை இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், புதுச்சேரி
2. துணை இயக்குநர் (பெண் கல்வி), பள்ளிக் கல்வி இயக்ககம், புதுச்சேரி
3. முதன்மைக் கல்வி அலுவலர், பள்ளிக் கல்வி இயக்ககம், புதுச்சேரி
4. பள்ளித் துணை ஆய்வாளர் வட்டம் I/II/III/IV/V, பள்ளிக் கல்வி இயக்ககம், புதுச்சேரி
5. உதவி மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒருங்கிணைந்த கல்வி, புதுச்சேரி